

வியாபார வலையில் சிக்கிவரும் மக்கள்!

டாட்டா - அலப்பே எக்ஸ்பிரஸ் விசாகப்பட்டினம் வந்து சேரும் நேரம் காலை சுமார் 10.30 மணி. நான் எனது குடும்பத்தோடு சென்னைக்குப் பிரயாணம் செய்து கொண்டிருந்தேன். நாங்கள் வண்டியில் ஏறியது விசாகப்பட்டினத்தில்.

காலையில் சுமார் 3.00 - 3.30 மணியளவில் இரயில் சென்னை - ஆந்திரா எல்லையில் நின்றுவிட்டது. காரணம் விபத்து.

பொது கம்பார்ட்மென்ட் இஞ்ஜினிற்கு அடுத்தது. பொதுவாக இந்தப் பெட்டியில் ஆட்கள் அதிகம். இது எல்லா இரயில்களுக்கும் பொருந்தும். சில வாலிபர்கள் இப்பெட்டியின் கதவில் அமர்ந்திருந்தனர். கதவின் படிகளில் அமருவது சட்டப்படி குற்றமாகும்.

சென்னை - ஆந்திரா எல்லையில் தண்டவாளத்தை அடுத்து சில பணிகள் நடைபெற்று வந்தன. அந்தப்

பணிகளுக்காக காண்ட்ராக்ட்ர் ஜேசிபி, லாரிகளையும் ஏற்பாடு செய்துவைத்திருந்தனர்.

அன்றைய பணி முடிந்தவுடன் வண்டிகளை பணியாட்கள் பணி செய்த இடத்திலேயே விட்டுச் சென்றனர். அவர்கள் இரவில் நெடுநேரம் பணி செய்ததால் கவனக்குறைவாக அவர்கள் விட்டுச்சென்ற அந்த வண்டிகளின் தூரம், தண்டவாளத்திலிருந்து ரயிலின் அகலத்தைவிடக் குறைவாகும்.

காலையில் அந்த ரயில் பாதையில் வந்த எக்ஸ்பிரஸ் வண்டிகள்மீது மோதி அவற்றை இழுத்துச் சென்றது. இழுத்துச் செல்லப்பட்ட வண்டிகள், ரயில் கதவில் அமர்ந்திருந்த வாலிபர்களைத் தாக்கவும், ஒருவர் சம்பவத்திலேயே உயிரிழந்தார்.

சிறிய வயதில் எங்கள் ஊரில் ஒரு சம்பவம். ஒரு பருந்து, பாம்பைத் தூக்கிச் செல்லும்பொழுது பாம்பு தவற, அது சைக்கிள் ஓட்டிச் செல்லும் ஒரு நபரின் மேல் விழ, அவர் சம்பவத்தில் உயிரிழந்தார்.

இவற்றில் எது தவிர்க்க முடியாத சம்பவம்? ரயிலில் பயணம் செய்த வாலிபர்கள் தங்கள் ஊரிலிருந்து சென்னைக்குப் பிழைக்க வந்தவர்கள். கட்டுமானத் தொழிலாளர்கள். தற்காலிகப் பணிக்காக செல்லும் இவர்கள் பெரிய தொழிற்சாலைகளுக்கு, நடந்தோ, சைக்கிளிலோ, தினம் நான்கு, ஐந்து கிலோ மீட்டர் பிரயாணம் செய்து, ஊதியம் பெற்று, தம்மையும், தம்மைச் சார்ந்தவரையும் காப்பதற்குத் தம்முடைய சொந்த ஊரிலிருந்து வெளிவந்தவர்கள்.



எனது 29 - 30 வயதில் கறைபடிந்திருந்த ஒரு குறிப்பிட்ட தருணத்தில் வேப்பிலைக் குச்சிகளால் பல் துலக்கினேன். சராசரியாக அனைவருக்கும் வளைவிலுள்ள பற்கள் சற்று மஞ்சளாக இருக்கும்.

வேப்பிலைக் குச்சியால் பல் துலக்கிய 1½இலிருந்து இரண்டு மாதங்களுக்குள் என்னுடைய எல்லா பற்களும் வெண்மையாக மின்னத் தொடங்கின. ஆனால் பட்டினத்தில் வேப்பிலைகள் சாதாரணமாகக் கிட்டாது.

டாடாவில் ஒரு வீட்டில் குடியிருந்தபொழுது, உபயோகிக்கப்பட்ட குச்சிகளைப் பார்த்த அந்த வீட்டின்

உரிமையாளர் குச்சிகளால் பல் துலக்கி வெளியில் போட வேண்டாம் என்றார்.


பேஸ்ட்டை உபயோகிப்பது தப்பில்லை. பல் பிரச்சினையும் தப்பவில்லை.

நம்மை நாமே சங்கிலியால் பிணைத்து எதனால் உந்தப்பட்டு இந்த நகரவாழ்க்கைக்குத் தள்ளப்படு கிறோம்.

ஆதியில் மனிதன் பழங்களையும், மிருகங்களையும் உண்டபொழுது அவனுடைய பிணைப்பு இயற்கையுடன் அதிகமாக இருந்தது. தனக்கென, தனக்காக அவன் இயற்கையை மாற்றும்பொழுது அந்தப் பிணைப்பு தளர்கிறது. மனிதன் விவசாயத்திற்காக நதியின் கரையில் குடியிருந்து பயிர் செய்யத் தொடங்கிய சமயத்திலிருந்து அவனுடைய தொழில்கள் இயற்கையை மாற்றும் விதமாக அமைந்தது.

இருக்க கொட்டகைகளும், வீடுகளும், உழவு செய்ய அவசியமான கலப்பைகளும், தண்ணீரை உபயோகிக்க பாத்திரங்களும் என அவனுடைய தொழில்கள் பெருக, இதன் காரணமாக இயற்கையாக அமைந்த சுற்றுப்புறச் சூழலை மாற்றும் நிர்ப்பந்தத்தில் மனிதன் உந்தப்படுகிறான்.

இயற்கை மனிதனின் தேவைக்கேற்றபடி மாற்றப் படுகிறது. மரம்செடிகொடிகள் தவிர்க்கப்பட்டு நடைபாதை உண்டாக்கவும், கிணறு வெட்டி மண்ணின் அடியில் நீரைப் பெறவும், குளம் வெட்டி நீரைத்



தேக்கவும் எனப் பற்பல செயல்கள் இயற்கையை மாற்றுகின்றன.

மனிதன் ஓரிடத்திலிருந்து விவசாயம் செய்ய முனைந்தபொழுது அந்தத் தொழிலிற்கு உபரித் தொழிலாக பல தொழில்கள செய்யவேண்டிய அவசியமும், அதை மனிதர்கள் அவரவர் இயற்கைக்கேற்ப தமதாக்கிக் கொள்ளவும், அந்தந்தத் தொழில்களின் பயன்களைக் கொண்டு, பிறருக்குக் கொடுத்து, தமது அத்தியாவசியங்களை அடையவும் எனச் சமுதாயம் உருவாக, ஒரு குறிப்பிட்ட பிரிவு மட்டும் வெளியிலிருந்து வரும் அபாயங்களை எதிர்க்க வேண்டிய நிர்ப்பந்தத்தில் தள்ளப்பட, இந்த வெளி அபாயத்தை எதிர்கொள்ளும் பிரிவினர் தமக்கு வேண்டிய அத்தியாவசியங்களை


அடைய, அவர் மற்றவர்க்குக் கொடுக்கும் பண்டங்கள் இல்லாததால், பிறர் தமது உற்பத்தியில் ஒரு பகுதியை இவருக்குக் கொடுக்க வேண்டிய நிர்ப்பந்தம் உண்டாக, இதுவே பின்னர் அரசாகவும், ஆளும் பிரிவினராகவும் உருவானது. மற்ற எல்லோரிடமும் சேகரிக்கப்பட்ட பண்டங்கள் இவர்கள் ஆதிக்கத்திற்கு உட்பட்டதாக மாறியது.

பண்டைய வாணிபம் ஓர் இடத்தில் குடிபெயர்ந்த மனிதர்களின் அத்தியாவசியத்திற்காக அமைந்தது.

மனிதன் வாழும் இடத்திற்கேற்ப பொருட்கள் கிடைக்கவும், அவற்றைத் தமக்குள் பரிமாற்றிக் கொள்ளும் நிலை ஒரு படியாக உயர்ந்து தமது இடத்தில் கிடைக்காத பொருட்களை தம்மிடம் உள்ளவைபோடு பகிர்ந்து பெற்றுக்கொள்ள, மனிதனுடைய வாணிபம் மற்ற இடத்திற்கும் வளர்ந்தது. வாணிபம் கண்ட முதல் லாபம் இதுவே.

ஒரே இடத்தில் உருவாக்கப்பட்ட பொருள்களில் ஒரு பங்கு அரச ஆளுகைக்கு உட்பட்டு இருக்க, அரசனுக்கு உகந்த விஷயங்களைக் கொடுத்து மனிதன் பரிசாக பொருள் பெற்றான். அந்த விஷயங்கள் இலக்கியம் ஆகலாம், நல்ல விலங்கினங்கள் ஆகலாம், விலைமதிக்க முடியாத கைவேலைகளாகலாம். இதனால் கலாசாரமும், இலக்கியமும், கலைகளும் வளரத் தொடங்கின.

கலைகளும் கலாசாரமும் வளர, வாணிபமும் கூடவே வளர, இயற்கையைப் பற்றிய மனித அறிவும் வளரத்



தொடங்கியது. அவனது கண்டுபிடிப்புகள் சிறிய காந்தத்திலிருந்து நகரைப் பிரகாசிக்கச் செய்யும் மின்சாரம் வரை, படகிலிருந்து பண்டங்கள் பல கொண்டு செல்லும் கப்பல்கள் வரை, துப்பாக்கி முதல் பல இடங்களை நாசம் செய்யும் அணுகுண்டுவரை என பலவகைப் பொருட்கள் கண்டுபிடிக்கப்பட அவற்றின் உற்பத்தி மேலும் இயற்கையை இயற்கைத் தன்மை யினின்று மாற்ற முற்படுகின்றன.

இந்த உற்பத்திக்கு உந்தமாக வியாபாரமும், அதனால் அடையும் நன்மைகளும் இடம் பெற, தனது அத்தியாவசியத்திற்குப் பின் மிகுந்திருந்ததை விற்றுப் பலனடைந்த மனிதன் இப்பொழுது விற்பதற்காகவே உற்பத்தி செய்ய முற்பட்டான்.

மனித நெருக்கம் அரசனுக்கும், அரசவைக்கும் உட்பட்ட இடங்களில் மிகுதியாகக் காரணம்

அரசாட்சியின் சமீபத்தைப் பயன்படுத்தி வாணிபரும், கலைஞரும், பிறரும் தத்தம் துறைகளில் தமது பெருமையை வெளிப்படுத்தி அரசவைக்கு அருகில் தம்மை நிலைகொள்ளச் செய்ததனால், இதனால் பட்டினங்கள் அரசவையையொத்துப் பெருகின.

மனித அறிவு பெருக அதனால் உற்பத்திகளும் பெருகத் தொடங்கின. பாரம்பரிய குடும்பப் பணியில் இரும்புப் பட்டறையின் கொல்லர் இரும்பை கரைப்பதும், சூடாக்குவதும், அடித்து மாற்றுவதும், காய்ந்த இரும்பை தண்ணீரில் கடுமையாக்குவதும், அக்னி பொருட்களை தீயாக்கி எரிப்பதும் என அவரது பணிகள் ஒருவராகவோ அல்லது ஒரு குடும்பத்தை சேர்ந்த நான்கு, ஐந்து பேராகவோ கூடி ஒரு குடும்பப் பணியாக திகழ, அப்பணி ஒரு குறிப்பிட்ட இடத்தைச் சேர்ந்த மனிதரின் அவசியத்தை பூர்த்தி செய்தது.

மனிதனின் அறிவு சாமர்த்தியம் வளர அது உற்பத்தியைப் பெருக்கும் வழிகளை அறிய முற்பட்டது. ஒரே குடும்பம், ஒரு தொழில் செய்யும் நிலை மாறி, பல குடும்ப மக்கள் ஒருங்கிணைந்து ஒரு பொருள் தயார் செய்யும் நிலை உருவாக ஆரம்பித்தது. உதாரணமாக, ஆடைகள் உற்பத்தி செய்யும் தொழிலகத்தில் மின்சாரமும், எந்திரங்களும், மனித நேர்த்தியும் என பலவகைப்பட்ட தொழில்கள் உள்ளடங்க, பல குடும்பங்களைச் சேர்ந்த மக்கள் ஓரிடத்தில் இணைந்து ஒரு தொழிலின் உற்பத்திக்காக உழைக்க வேண்டிய நிர்ப்பந்தம் உண்டாக, மனித இறுக்கம் தொழிற் பேட்டைகளிலும் பெருகத் தொடங்கின. வணிகன்

லாபத்திற்காகத் தயாரித்த பொருளை விற்க இடம் தேடினான். பெரிய அளவிலான உற்பத்தியை விற்க உகந்த இடம் மனிதப் பெருக்கம் அதிகளவில் உள்ள இடமாகும். அதில் ஒன்று அரசவை, அரசாட்சி ஒன்றிய இடம், மற்றொன்று தொழிற்பேட்டை.

இந்த மனித பெருக்கம் அதிகமுள்ள இடங்களில் மனித எண்ணிக்கை பெருக மனிதனுக்கான தேவைகளும் குவியத் தொடங்கின. இந்த ஒருங்கிணைந்த மனிதக் கூட்டத்தில் தானும் பயனடைய, பலதரப்பட்ட மக்கள் பல இடங்களிலிருந்து குடிபெயர்ந்து தமது வளர்ச்சியை இந்த மனிதச் சந்தை மூலம் அடைய முனைந்தனர்.

மேலும், மேலும் மனிதர்கள் குவிய, மேலும் மேலும் பொருள்களும் பண்டங்களும் குவிய, இந்த மனித நெருக்கம் அல்லது மனிதச் சந்தை எல்லோரையும் நடத்த, இயற்கையை மனிதன் தன்வயப்படுத்த முனைந்த எழுச்சி அதனை மாற்றத் தொடங்கியது.

அதுவரை கைக்கு எட்டிய பல பொருட்கள் இயற்கைத் தன்மையை கேள்விக்குறியாக்கியபின் எட்டாத பொருளாகி விட்டது. பல் துலக்க உதவும் வேப்பிலைக் குச்சி ஓர் உதாரணம். இதற்கு பதிலாக நீத்பேஸ்ட்டைக் கண்டுபிடித்து அதனை மனிதச் சந்தையில் விற்று லாபமடைந்தான் வணிகன்.

இது ஒன்றன் பின் ஒன்றாய் காய்கறிகளிலும், மாமிசங்களிலும், மாட்டுப் பாலிலும்கூட மாற்றத்தைக் கொண்டுவந்து விட்டது.



மனிதச் சந்தையும் அரசியலும்

1984ஆம் ஆண்டு நான் பொறியியற் கல்லூரியில் இரண்டாம் வருடம் படித்துக் கொண்டிருந்த தருணம்.

அது இலங்கையின் கலவரத்தின் உச்சக்கட்ட நேரம். எங்கள் கல்லூரி மாணவர்களும், மற்றைய கல்லூரி மாணவர்களும் ஒருங்கிணைந்து போக்குவரத்துக் கழக வளாகத்திலிருந்து கலெக்டர் ஆபீஸ் வரை நடந்து சென்று இலங்கை இனக்கலவரத்தை ஒழிக்கக் கோரி மனு கொடுத்த பின்னர், மறியலிலும் ஈடுபட்டோம்.

போலீஸ் எல்லா மாணவர்களையும் பேருந்துகளில் ஏற்றி, போலீஸ் விளையாட்டு திடலில் கொண்டுசென்று இறக்கினர். அங்கு நான்கு மணி நேரம் அமரவைத்தபின் அவரவர் இடத்திற்கு பேருந்துகளில் கொண்டுசென்று இறக்கிவிட்டனர்.

இனக்கலவரப் பிரச்சினையைத் தீர்க்க அண்டைய நாடுகளும் முன்வருகின்றன. இதற்கான பல காரணங்கள் இருப்பினும், இதன் முக்கிய காரணம்:



மனிதச் சந்தையில் மனிதர்கள் மத்தியி
போராட்டமற்ற வாழ்க்கை. மனித நெருக்கம் கொண்ட
சந்தைகளில் போராட்டம் மனித வாழ்க்கைய
மட்டுமன்றி மனிதச் சந்தையின் லாபத்தையும்
விற்பனையையும் பாதிக்கும்.

அரசன் நாட்டின் ஆளுநன், ஒரு கஜானாவின்
அதிகாரி. மனிதச் சந்தையின் லாபத்தால் ஒருசி
வணிகர்கள் அரசன் நிலைக்கு உயரத் தொடங்கினர்
அரசன், பிரஜை என்ற நிலை போய், அரசன், வணிகள்
பிரஜைகள் என்ற நிலை உருவாகியது.

இவர்களில் ஒருவர் மற்ற இருவரை தம் பிடியில்
தமக்கேற்ப, தமது சாதகமான விஷயங்களிற்காக
பயன்படுத்த விரும்பி, நிர்ப்பந்திக்கப்பட, அது ஒரு

மும்முனைப் போராட்டத்திற்கு வித்தானது. இவர்கள் போராட்டம் ஒரு சமரச சமாதானத்திற்கு வித்தாகி மக்களாட்சி உருவாகியது.

அரசனுக்கு மக்களிடம் செல்வாக்கு உண்டு. பெரிய எண்ணிக்கையோடு மக்களிடம் தொடர்பு உண்டானதால், வணிகனுக்கும் மக்களிடம் செல்வாக்கு உண்டு. பிரஜைகள் கல்வியும், புகழும் கொண்டவரை மனிதர்களின் மக்களாட்சியில் பங்குபெறச் செய்தனர்.

மக்களாட்சியில் முதலில் தேர்ந்தெடுக்கப்பட்டவர் சராசரி மனிதனோடு வாழ்க்கை நடத்தி அவர்கள் மனதில் இடம்பிடித்தவர் ஆவர். நாளடைவில் மக்களாட்சி மக்கள் சந்தையில் ஒரு முதலாக மாறியது. அரசன் மக்களாட்சியில் பங்கு கொண்டு தனது நிலையை வணிகனுடன் சமரசப்படுத்த மக்களாட்சியில் அரசவைக்கு உயர்த்தப்பட்ட சிலர் அதைத் தமக்கு மனிதச் சந்தைக்கு உகந்ததாக மாற்றியமைக்க, வணிகன் இவர்கள் இருவருக்கும் ஒத்துப்போக, சாதாரண மனிதன், மக்களாட்சி மக்களுக்காக அல்லாது, தனி மனித பயனுக்காக என்று புரிந்துகொள்ளத் தொடங்கினான்.

வணிகன் உருவாக்கிய மனிதச் சந்தையை அரசாங்கமும் உருவாக்கத் தொடங்கியது. அதன் பரிணாமம், ஓரிடத்தில் மனிதர்கள் குவிய இடப்பற்றாக குறைக்கும், இயற்கையில் மாற்றங்களுக்கும் வழி வகுக்கின்றன.

கிணறுகள் மூடப்படுகின்றன. பம்பு மூலம் நீர் நிலத்தடியிலிருந்து தரைமட்டத்திற்குக் கொண்டு

வரப்படுகிறது. நிலத்தடி தண்ணீரும் வற்ற, மனிதன் அரசாங்கத்தை நாட, குழாய்களில் வீட்டுக்கு வீடு தண்ணீர் அனுப்பப்படுகிறது. அதுவும் அரசாங்க கணக்குப்படி, ஒரு குறிப்பிட்ட நேரத்தில். மனித சந்தையில் வளம் பெற்றவர் சுத்திகரிக்கப்பட்ட தண்ணீர் பாட்டில்களை உபயோகிக்க ஆரம்பித்தனர். அரசாங்க நீருக்கு அருகாமையில் இல்லாதார் கைபம்பு உதவியை நாடுகின்றனர். மனிதனின் பௌதிக, உயிரியல் கழிவுகளும், ரசாயன அவசியமில்லா பொருள்களும் பூமியின் அடி புகுந்து நீரை மாசுபடுத்த, நிலத்தடி நீர் எடுத்தவுடன் குடிப்பதற்கு தகுதியற்றதாகின்றது. மனிதன் இயற்கை நீரிடமிருந்து தள்ளப்படுகின்றான்.

சொந்த ஊரில் பணி செய்த மனிதன் இந்த மாற்றங்களில் உந்தப்பட்டு, பணிக்காக தொழிற்சாலை களுக்குச் செல்ல வேண்டிய நிர்ப்பந்தத்தில் வண்டிகளின் துணையை நாடுகிறான். போக்குவரத்து பெருக ஆரம்பிக்கிறது. கூடவே காற்றின் அசுத்தமும், சீமான்கள் மூடிய கார்களிலும், மற்றும் பலர் இரு சக்கர வண்டிகளிலும் செல்ல, அசுத்தக் காற்றை, சுவாசிக்கும் சரசாரி மனிதன் இயற்கைக் காற்றினிடமிருந்து தள்ளப்படுகிறான்.

அதிகம் உற்பத்தி செய்வதாகவும், குறைந்த நேரத்தில் உற்பத்தி செய்வதாகவும் உள்ள செயற்கைக் காய்கறிகள் கண்டுபிடிக்கப்பட, அவற்றையும் மனிதச் சந்தையின் தனக்கு சாதகமாக்குகிறான் மனிதன். சராசரி மனிதனுக்கு இயற்கைத் தின்பண்டங்களும், காய்கறிகளும் தூரமா

கின்றன. இவற்றில் பசும்பாலும், நெய்யும், தேனும் பொருந்தும்.

மனிதச் சந்தையில் லாபமடைந்த ஒரு பகுதி மக்கள் கிராமப்புறங்களில் படையெடுக்க, சராசரி மனிதன் கிராமம் அற்றவனாய், இயற்கைக்கு ஒவ்வாதவனாய், பட்டினத்தில் பொருந்தாதவனாய் வாழ்கிறான்.

மனிதச் சந்தையில் தானும் முன்னேறக் கோரி அங்கு கிடைக்கும் மின்சாரமும், கேபிள் நெட்வொர்க்கும், தண்ணீரும், பாலும், பண்டங்களும், போக்குவரத்து வசதிகளும் உதவும் என அவற்றோடு உடன்பட்டு வாழ, ஒரு தனி மனிதன் இயற்கையினின்றும் மாறுபட்ட சூழலில், அரசாங்கத்தின் கட்டமைப்புக்குள், திறந்த வெளியில், சிறையில் உள்ளான்.

அந்தச் சந்தை இயற்கைச் செழுமையை, அது தரும் வளத்தை, இயல்பான வாழ்க்கையைக் கவர, சராசரி மனிதன் வாழ்ந்தும் வீழ்ந்தவனாகின்றான்.





மனிதச் சந்தையும் கலாசாரமும்

அது நான் பணி புரிந்துகொண்டிருந்த தருணம். நான் பணி செய்யும் தொழிற்சாலையில் ஒரு மருத்துவ ஆஸ்பத்திரியும் உண்டு. அங்கு ஒரு பெண்மணி பணி செய்து கொண்டிருந்தார். அவர் ஒரு விதவை. சிறிய வயதில் கணவனை இழந்தவர். அவரது கணவர் அந்தத் தொழிற்சாலையில் பணி செய்து கொண்டிருந்தவர். கணவர் இறந்தபின் அவரது மனைவிக்கு இந்தப் பணியை கொடுத்திருந்தனர்.

நான் அந்தப் பெண்மணியிடம் பற்றுக் கொண்டேன். தக்க தருணத்தில் எனது எண்ணத்தை அவரிடம் உரைத்தேன். அவர் கூறியதாவது: எனக்கு ஒரு மகள் உண்டு. அவளுக்கு அவசியமாக பணமும், நகைகளும் எனது கணவரின் சேமிப்பிலிருந்து பாதுகாத்துள்ளேன். எனது மகளின் பொருளாதாரச் சுமை உங்களுக்கு இருக்காது. ஆனால் நீங்கள் என்னை மணந்து கொள்ள வேண்டும் என்றார்.



விரும்புவதும், மணப்பதும், பிள்ளைகள் பெறுவதும் கர்மம் எனில், நம்மைச் சார்ந்தவரை பாதுகாத்து தக்க தகுதிவரை கொண்டு சேர்ப்பது யக்ஞமாகும்.

மனிதச் சந்தையின் முக்கிய பாகம் வகிப்பது குடும்பத் தொழில் மறைந்து, பல குடும்ப மக்கள் இணைந்து ஒரே உற்பத்திக்கு வழி வகுக்கும் முறை நடைமுறைக்கு வந்ததால் ஏற்பட்ட மாற்றமே.

இதனால் பலதரப்பட்ட மக்கள் ஒரே இடத்தில் குவிய, அவர்களின் பலவேறுபட்ட அத்தியாவசியங்களை பூர்த்தி செய்ய அதற்கான மற்றொரு மக்கள் கூட்டம் உருவாக, இந்த மனிதச் சந்தை வளரத் தொடங்கியது. இதனால் மக்கள் கலப்பும், மாறும் நில அதிகாரமும், பேசும் மொழியில் வேற்றுமையும் உருவாக, இந்த

மாற்றத்திற்கு ஒத்துழைக்க மறுக்கும் மக்கள் கூட்டமும் தலைதூக்கியது. இதனால் மக்கள் மத்தியில் போராட்டம் உருவாக இதை அரசாங்கம் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவரக் கோரி, மக்கள் மத்தியில் சமத்துவக் கருத்தை பிணைய வைத்து, அந்தக் கருத்திற்கு சட்டத்தையும், பாதுகாப்புப் படைகளையும் துணை நிற்கச் செய்தது.

இந்தச் சமத்துவக் கோட்பாடு தனி மனித உரிமை, பொதுக்கல்வி, பெண்கள் சுதந்திரம் என பல முன்னேற்ற எண்ணங்களுக்கு வித்திட்டது.

எனினும், மனிதச் சந்தை சுகாதாரத்தையும் இயற்கையையும் மாற்றியது மட்டுமல்லாது கேளிக்கை என்ற பெயரில் வாழ்க்கையின் பல விஷயங்களை கொச்சைப்படுத்துவதிலும் தவறவில்லை.

ஐ.பி.எல். மேட்சில் அரைகுறை உடைகளுடன் நான்கு, ஐந்து பெண்டிர் கிரிக்கெட் மேட்சின் ஆட்ட சுவாரசிய கட்டத்தில் அரங்கில் ஆடும் நடனம் ஒரு எடுத்துக்காட்டு.

குடும்பத் தொழில், தொழிலின் அவசியத்திற்காக வேண்டி கூட்டுக் குடும்பத்தை, கூட்டுக் குடும்ப வாழ்க்கையை வரவேற்றது. அதனால் பணிகள் சுலபமாகவும், அதிக அளவில் குடும்ப மக்கள் உடையதால், அதிக பயன் தரும் பணிகள் செய்யும் வாய்ப்பினையும் கொடுத்தது.



பல குடும்பங்கள் ஒருமித்து ஒரு சாதனத்தை உருவாக்க விழைந்தபோது கூட்டுக் குடும்பங்கள் உடையத் தொடங்கின.

கூட்டுக் குடும்பங்களில் பெண்டிரையும் வயதில் முதிர்ந்தவரையும், குழந்தைகளையும் பரிதவியாது பார்த்துக் கொள்ளக்கூடிய சூழ்நிலையும், அதற்காக மனிதரும் இருந்தனர். ஆனால் கூட்டுக் குடும்பங்கள் உடைந்தபோது இந்த எளியவரை கண்காணிப்பது, அவர்களது தேவைகளை பூர்த்தி செய்வது குறைவானது. அதுவும் கணவனை இழந்த மனைவியும், பெற்றோரற்ற குழந்தைகளும், கவனிக்க நேரம் ஒதுக்க முடியாது இருக்கும் மகன்களுடன் வசிக்கும் பெற்றோரும் என ஒரு பட்டியல் போடலாம்.

வரலாற்றுப் போர்கள் மூலம் நாம் அறியும் முதல் விஷயம், மனிதன் தான் வாழும் மண்ணைக் காக்கப்

போர் புரிந்தான். தம்மை இத்தனை நாட்கள் காத்த மண்ணைக் காக்க அல்ல இந்த போராட்டம். இந்த மண் தம்முடைய வரும் சந்ததியர்க்கு அமிர்தமாக இருக்கக் கோரியாகும்.

இரண்டு, தன் சந்ததியினரை, குழந்தைகளைக் காக்க போர் தொடுத்தான். தான் இறப்பினும் தனது சந்ததியினர் பல ஆயிரம் ஆண்டு வாழவேண்டும் என்ற கோரிக்கைக்காக.

தமது பெண்டிரையும், மகளிரையும் காக்கவேண்டி போர் புரிந்தான். ஏனெனில் தமது அடையாளத்திற்கு மாசு, பங்கம் ஏற்படாதிருக்க.

பெண் ஆணின் அடையாளம். ஒரு குடும்பத்தின் அடையாளம். ஒரு இனத்தின் அடையாளம். அந்த இனம் மாசற்று இருக்கக் காப்பது ஆணின் கடமை.

மனித கலாசாரம் பெண்களைச் சார்ந்துள்ளது. மனிதச் சந்தையின் தொழில்முறை கூட்டுக் குடும்பத்தை பாதிப்பதால், பெண்களின் பாதுகாப்பையும் பாதிக்கிறது. இதற்கு ஜனநாயக் கோட்பாடுகளுடன் அரசாங்கம் பெண்களுக்கு சலுகைகளும் உரிமைகளும், சமத்துவ தத்துவத்தால் பதவிகளும் கொடுத்து சரிசெய்வது எவ்வளவு வரை சாத்தியமாகும்.





மனிதச் சந்தையும் ஆன்மிகமும்

இரவு உணவு உண்டபின் நானும் என் சகோதரர்களும் மொட்டை மாடியில் படுக்கை இட்டு உறங்கத் தயாரானோம். அது பௌர்ணமி இரவு.

எனது மனம் எனது நினைவை இந்த உலக அளவில் அலச ஆரம்பித்தது. அது நான் எனது பட்டப்படிப்பை முடித்த தருணம்.

பரந்து பெருகிய நீலவானம். அதில் ரம்மியமான சந்திரன், எண்ணிலடங்கா நட்சத்திரங்கள் இவை அனைத்தையும் ஒருங்கிணைத்து நோக்கும்பொழுது இந்த இயற்கையில் எனது நிலையை உணரும்பொழுது அது ஒரு சிறிய, சின்னஞ்சிறிய இடத்தை வகிப்பதையும், அந்தச் சிறிய இடம் இந்த வாழ்க்கையின் அர்த்தத்திற்கு ஒரு கேள்விக்குறியை எழுப்புவதையும், எண்ணும் எனது மனத்திலிருந்து, நான் விடுபட நீண்ட நேரம் பிடித்தது.

அறிவு என்பது காரணத்தையும், அதனால் உண்டாகும் காரியத்தையும் ஒருமித்து உணர்வது.